தமிழ் வாழ்க.

# தமிழ்ப் பொழில்


துணர் ௩௰ மலர் ௬—௧௨

சய—புரட்டாசி—பங்குனி.



கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.



பொழிற்றொண்டர்:

இராவு சாகேப். S. சுயம்பிரகாசம், B. A., B. L., M. L. A.

# உள்ளுறை.

துணர் ௩௰ —— மலர் க--கஉ


1. சங்கத் தலைவரின் பிரிவு 1

இரங்கற் கூட்டம் சங்க அமைச்சர். 4

2. தமிழர் கடமை 5

தியாகமோகன் B A., Hons.

3. பண்புச் சோலை 8

புலவர் ச. அருணாசலம்

4. திருக்கோவையார்-உரையாசிரியர் 10

வித்துவான் K.M. வேங்கடராமையா, M.A., B.O.L.

5. தமிழ் மொழி 18

வித்துவான் S. தாமஸ் உடையார்.

6. இரங்கற் செய்தி 20

வித்துவான் சடகோபராமாநுசம் பிள்ளை

7. கையறு நிலை 21

சங்க அமைச்சர்

8. தமிழக ஆட்சிமொழி மாநாடு 23

சிவ பழமலை

9. நன்கொடை சங்க அமைச்சர் 25

10. மொழிபெயர்ப்பு 26

புலவர் சி. கோவிந்தராசன்

11. மனிதன் நா. இராசகோபாலன் 28

12. கல்வி மாநாடும் கன்னித்தமிழும் 33

பொழில் ஆசிரியர்.

13. தென்றல் இனிதா? தமிழ் இனிதா? 37

வித்துவான் த.பொ. கண்டபாணி, பி.எ, புதுச்சேரி.

14. மூன்றும் நான்கும் 44

வித்துவான் வி.அ. அரங்கசாமி திருவையாறு.

15. அமைதி 53, 69

வித்துவான் ச. பாலசுந்தரம், விரிவுரையாளர்,

கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

16. அமராபரணன் புலவர் சி. கோவிந்தராசன். 63

16. தமிழாசிரியர் மாநாடு—பொழில் ஆசிரியர் 65

17. சென்னை மாநில தமிழாசிரியர் 2-வது மாநாடு 67
புலவர், ஏகாம்பரநாதர்,
வீரராகவ உயர்நிலைப்பள்ளி, தஞ்சை.

18. தமிழ் நாட்டவர்க்கு வேண்டுகோள் 74
திரு. அடிகளாசிரியர், கல்லூரி விரிவுரையாளர்
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

19. தமிழ் நாடு 76
வித்துவான் S. தாமஸ் உடையார்.

20. ஷெல்லியின் காதல் தத்துவம் 78
வேலூர், காரழகன்.

21. வஞ்சப்போர் 83, 162, 223
வித்துவான், ச. பாலசுந்தரம், விரிவுரையாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

22. சிலந்தி சிரித்தது வளவன். 94

23. தமிழும் வேங்கடமும்—பொழில் ஆசிரியர். 97

24. Kambaramayanam 101
Proposed authorised edition,
N. Kandasami.

25. கம்பராமாயணப் பதிப்பும் நிலைமையும் 124, 137
நீ. கந்தசாமி

26. உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி
இலக்கிய மன்றத் திறப்புவிழா 132

27. அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் அருந்தமிழும் 133
பொழிற்றொண்டர்.

28. Disallowed Questions 153
N. Kandasami

29. பொழில் அன்பர்களுக்கு — பொழிற்றொண்டர் 165

30. கவிமணியவர்களின் மறைவு ,, 166

31. அறிவியல் பேராசிரியை மறைவு ,, 167

32. பிரஞ்சிந்திய விடுதலை ,, 167

33. வெள்ளிவிழா நினைவு மலர் ,, 168

34. ச. சோமசுந்தர பாரதியார் அவர்கட்குப் பாராட்டு 171

35. புலவர் கல்லூரி விழா—பொழிற்றொண்டா 173

36. தேவாரப் பாடசாலைப் பொன்விழா நிகழ்ச்சிகள் 174
வித்துவான்; வை. சுந்தரேச வாண்டையார்

37. அகம்—ஆ. பசுபதி, வித்துவான் இறுதிநிலை 178

38. ஜெர்மன் கவியரசர் கதே 181
வேலூர் காரழகன்

39. பாரதி யார்? சு. இராமச்சந்திரன் 191

40. இறப்பிலும் இன்பம் 202
P. பட்டுசாமி IV U. C.

41. மாதவி 207
வித்துவான் ஆ. சிவலிங்கனுர், மயிலம்.

42. தூக்கம்—வளவன் 213

43. தெய்வம் எங்கே? வளவன் 2 6

44. வரலாற்றில் நாம் 229
இரா. பெரியசாமி III U. C.

45. நான் கண்ட கலையமுதம் 233
வித்துவான் த. பொ. தண்டபாணி பி. ஏ.
புதுச்சேரி.

46. மாணிக்கவாசகர் 253
வித்துவான் மு. சடகோபராமானுசம் பிள்ளை,
விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி.

47. புரவலர் உள்ளம் (கவிதை நாடகம்) 283
வித்துவான் ச. பாலசுந்தரம் விரிவுரையாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

48. உருவ வழிபாடு 307
ச. பா.

49. புயல் 309
புலவர்; R. ஏகாம்பரநாதன், தமிழாசிரியர்,
வீரராகவ உயர்நிலைப்பள்ளி, தஞ்சை.

50. சூழ்ச்சித் திறன்—கு. ந. நாகலிங்கம் 351

51. மதிப்புரை 357

# NAMES AND ADDRESS OF DONORS TO KARANTHAI TAMIL SANGAM.

| No. | | Address. | Amount |
|---|---|---|---|
| | | | Shilling |
| 1 | Messrs. | J. M. Mohamed Ismael Fils Aziz & Co 177-179 Rue Catinat Saigon | 15.000 - |
| 2 | „ | Muthu Rama & Cie 138 Rue Pellerin „ | 15.000 - |
| 3 | Mr. | V Nadimuthu Pillai 219 Rue Lagrandiere „ | 10.000 - |
| 4 | Madam | S. Virammalle 205 Rue Lagrandiere „ | 5.000 - |
| 5 | Mr. | S. Abdul Carime 16 Boulevard Bonnard „ | 5.000 - |
| 6 | „ | MA. Abdul Rahimane 59 Boulevard Gallieni „ | 5.000 - |
| 7 | Madam | MA. Abdul Rahimane „ „ | 5.000 - |
| 8 | Mr. | S. Subbaya Pillai 29 Rue Ohier „ | 3.000 - |
| 9 | „ | M. E. Hamid Maricar 84 Rue Vannier „ | 3.000 - |
| 10 | „ | KA. Abdul Rahimane 393 Rue des Marins Cholon, Saigon | 3.000 - |
| 11 | „ | O. Abdul Karime 77- 79 Rue Catinat Saigon | 2.000 - |
| 12 | „ | A. B. Abdul Hamid 399 Rue des Marins Cholon. Saigon | 1.000 - |
| 13 | „ | A. B. Mohamed Chariff Rue Vannier Sigon | 1.500 - |
| 14 | „ | S. Thangavelou Poulle 24 Rue Kiew Hoa Cholon Saigon | 1.000 - |
| 15 | „ | Huynh Ly Trung Rue Lagrandiere Saigon | 1.000 - |
| 16 | „ | J. M. Abdul Mohamed 12 Place Francis Garnier Saigon | 1.000 - |
| 17 | „ | S. Vadivelou Vandayar (Pagoole) Bd Cong Doc Phuongcholon Saigon | 1.000 - |
| 18 | „ | 18 Paul Sinnas 118 Rue Leon Combes Saigon | 1.000 - |
| 19 | „ | M. P. Mohamed Soultane 222 Rue d'Espagne Saigon | 1.000 - |
| 20 | „ | M. A. Mohamed Ibrahim 47 Boulevard Charner Saigon | 1.000 - |
| 21 | „ | V. K. Mohamed Ibrahim 54 Rue Vannier Saigon | 1.000 - |
| 22 | Messrs. | The Singapore Store 35 Rue Freres Denis Saigon | 1.000 - |
| 23 | Mr. | M. Mohamed Soultane 85 Rue Catinat „ | 1.000 - |
| 24 | „ | MA. Abdul Karime 40 Boulevard Bonard Saigon | 1.000 - |
| 25 | Messrs. | YA. Abdullaasa Freres 72 Rue Vannier „ | 1.000 - |

| No. | | Address. | Amount |
|---|---|---|---|
| | | | Shilling |
| 26 | Messrs. | S Agamadouleve Maricar Fils 14-16 Rue de Marche Saigon | 1.000 - |
| 27 | Mr. | Abdul Salam 389 Rue des Marins Cholon | 1.000 - |
| 28 | „ | J. Anandam 235 Rue Lagrandiere Saigon | 1.000 - |
| 29 | „ | ENA. MOUNA, Mouttappa Chettiar 64 Rue Ohier Saigon | 1.000 - |
| 30 | „ | RM. M. RM. Kasi Chettyar „ „ | 750 - |
| 31 | „ | D. M. M N. Narayanane Chettyar 35 Due Cheir Saigon | 750 - |
| 32 | „ | A. O Oulagappa Chettyar 33 Rue Cheir „ | 500 - |
| 33 | „ | K. T. N. RM. T. Tenappa Chettyar 116 Rue Pellerin Saigon | 500 - |
| 34 | „ | A. M. A. Pajaniappa Chettyar 64 Rue Ohier Saigon | 500 - |
| 35 | „ | G. Dumont 47 Rue Amiral Roze „ | 500 - |
| 36 | „ | A. Subbaya Pillai 46 Rue des Artisans Cholon | 500 - |
| 37 | „ | S. M A. M. AR, Arounassalam Chettyar 23 Rue Ohier Saigon | 300 - |
| 38 | „ | S. T. KM. Kumarappa Chettyar 31 Rue Ohier Saigon | 200 - |
| 39 | „ | A. K. Kathiappa Thevar, 146, Rue Teshard | 3.000 - |
| 40 | „ | J. M. Abdul Rahim 27, Rue Catinat | 1.000 - |
| 41 | „ | Ramalingam Pillai, 5, Rue Phan,than Giang | 500 - |
| 42 | „ | Damodaran, 56, Rue Ohier | 500 - |
| 43 | „ | Muthukaruppa, 40, Rue Chenuin de Dames | 500 - |
| 44 | „ | V. M. Kasi meyappa Chettiar, 29, Rue Ohier | 500 - |
| 45 | „ | Abdul Jabel 176, Rue Lagarandiere | 300 - |
| 46 | „ | M. N. M. Srine Chettiar 132, Rue Espagne | 300 - |
| 47 | „ | P. R. AL. M. M. Meenakshiachi 64, Rue Ohier | 300 - |
| 48 | „ | L. Somasundara Chettiar 35, Rue Ohier | 200 - |
| 49 | „ | Abdul Gafoor Caffray, 90, Bd. Bonard | 200 - |
| 50 | „ | Ave. Issoup Fils, 53, Bd. Bonard | 1.000 - |
| | | Total | 102300 |

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| துணர் ௩௰ | திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௮௰௫<br>சய—சித்திரை<br>1954—ஏப்ரல் | மலர் ௧ |


## சங்கத் தலைவரின் பிரிவு.

திருவள்ளுவராண்டு 1985 சித்திரைத்திங்கள் ஒன்பதாம் நாள் (21—4—54) புதன்கிழமை இரவு 10 மணியளவில், கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திருவாளர் ஆ. யா. அருளானந்தசாமி நாடாரவர்கள் மறைந்தார். அவர் மறைவு தமிழ்ச் சங்கத்திற்கும், தஞ்சைக்கும், தமிழ் நாட்டிற்கும் ஆற்றொணாத் துயரை அளித்தது. பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தாற் போலவும், ஊருணி நீர் நிறைந்தாற் போலவும் வாரி வழங்கிய வள்ளலைத் தஞ்சை இழந்தது. சாதியோ, சமயமோ கொள்கையோ பாராமல், நின்னுடைய துன்பம் என்னவென்றறிந்து அதனைப் போக்கி அருள் செய்யும் திருவாளரைத் தஞ்சை பறிகொடுத்தது. வாழ்வாங்கு வாழ்ந்த வகைமையாளரைத் தஞ்சை நினைந்து வருந்தவேண்டியதாக ஆயிற்று. அன்று மறைந்த மாண்புடையோருக்கு மறுநாள் மாலை நகரப் பெருமக்களும், ஏனைய நகரத்தவரும், நாட்டவரும், பொதுமக்களும், வெள்ளம் போல் ஒக்கக் கூடித் துயருழந்து அழுதனர். புலம்பினர். அரற்றினர். கைம்மலரணிவித்துக் கண்மலர் நீர் சிந்தினர். அம்மட்டோ! கடுங்கதிர் காயும் கோடையிலும் மேகங்கள் கூடிச் சிறுதுளி சிதறிச் சிந்தை நொந்தவைபோலக் காணப்பட்டன. இவ்வாறு மக்களெல்லாம் வருந்த மறைந்த மாண்புடையாளரின் வாழ்வின் நுட்பம் என்ன? மருந்தாகித் தப்பா மரம்போலப் பயன்பட்டு வாழ்ந்த வாழ்வின் பயனே யாகும்.

ஆய் என்னும் வள்ளலை "அறவிலை வணிகன் ஆயலன்" என்று புறநானூற்றுப் பாட்டு பாராட்டுவதை அறிவோம். அதுபோல, இக்காலத்தில் நம் கண்ணெதிரே புகழ் நோக்கி மட்டும் வழங்காது, மக்களின் துயர் நோக்கி வழங்கி வாழ்ந்தார். நிழலில்லாத நீண்ட வழியில் ஒரு தனி மரம் நின்று நிழல் கொடுத்ததைப் போல ஏழை, எளியராய் வருந்தி

வந்தோர் அரும்பசி களைந்து வாழ்ந்தார். உடையற்றவருக்கு உடை வழங்கினர். பயணச் சீட்டையும் பணத்தையும் பறிக்கக் கொடுத்து விட்டுப் பதறி வந்த பலருக்குச், சீட்டும் பணமும் திரும்பவும் ஈந்து சிறந்த துணையாக இருந்தார். இவ்வாறு யாதும் தொடர்பில்லாத மக்கட்கு ஒவ்வொரு நாளும் செய்துவந்த உதவிகள் மிகப் பலவாகும்.

அடுத்துக் கல்விக் கழகங்கட்கும், அவைகளில் பயிலும் மாணவர்கட்கும் நன்கொடைகளும், உதவித் தொகைகளும் வழங்கி வளமுறச் செய்தார். தஞ்சையிலுள்ள கல்விக் கழகங்கள், கூட்டுறவுக் கட்டிடக் கழகம், விளையாட்டுக் கழகம், கிறித்துவ சமய சம்பந்தமான கழகங்கள் இன்னும் பலவகையில் தஞ்சையி லமைந்துள்ள கழகங்களிலெல்லாம் தலைவராகவும், துணைத் தலைவராகவும், புரப்பாளராகவும், உறுப்பினராகவும் இருந்து ஆற்றிய தொண்டுகள் பலவாகும். அவருடைய தொடர்பை நாடாத பொது நிலையங்கள் தஞ்சையில் இல்லை என்று சொல்லுமளவுக்கு அவருடைய புகழ் விஞ்சியிருந்தது. ஆறு ஆண்டுகட்கு மேலாக நகர மன்றத் தலைவராக இருந்தார். தன்னுடைய தோட்டத்தை நகர மன்ற இள மரக்கா போல எல்லா மக்களும் வந்து இருந்து இன்பம் அயரப் பல வகையான வசதிகளை யெல்லாம் செய்து தந்துள்ளார்.

சங்கத் தலைவராகப் பத்து ஆண்டுகள் சிறந்த தொண்டுகள் ஆற்றினர். சங்கமானது கல்லூரி, உயர் நிலைப்பள்ளி, தொடக்கப் பள்ளி, ஏழை மாணவ ரில்லமாய நான்கு பெரிய நிலையங்களைப் புரக்கும் கடப்பாட்டை மேற்கொண்டிருக்கின்றது. இதனல் சங்கத்திற்குப் பொருளாதார முட்டுப் பாடு ஏற்பட்டது. இந் நிலையங்களை யெல்லாம், பண்டிருந்தவாறே நிகழச் செய்யவேண்டுமென்னும் பெருநோக்கால் திருவாவடுதுறை ஆதீனத் தலைவரோடு ஒப்பந்தம் செய்துகொண்டு, நடத்தியருளுமாறு செய்தது இவர்கள் காலத்தில் தானகும். இதற்காக இவர்கள் அலைந்த அலைச்சல் கொஞ்சமல்ல. சமய நெறியில் மாறுபட்டவரா யிருந்தாலும், தமிழ், தமிழ்ச்சங்கம் என்பது சமயங்கடந்தது என்னும் பெருநோக்கால் மனத்தில் எதையும் சிந்தியாது, ஆதீனத் தலைவரை முறைப்படிப் பலமுறை சந்தித்து ஆவன செய்தமை எல்லோராலும் பாராட்டக்கூடிய சிறந்த செயலாகும். அப்பொழுதிருந்த ஆதீனத் தலைவர் மறைந்தவுடன், புதிய தலைவர் ஏற்று நடத்தும் பொறுப்பை மீண்டும் சங்கத்திடம் கொடுத்த போதும் மனச் சலிப்பின்றி, நிலையங்கள் நன்முறையில் நிகழ ஆவனவற்றையெல்லாம் அயர்வின்றிச் செய்திருந்தார். சங்க உணவு விடுதியில் இலவச உணவு பெற்றுப் பயின்ற மாணவர்க்காக ஆயிரக் கணக்கான வெண்பொற் காசுகள் உதவியுள்ளார். எப்பொழுதும், உரையாடும்

போது சங்கம், சங்கத்துக் கல்வி நிலையங்கள் இவைகளைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பார். இவ்வாறு சங்கத்தின் மேன்மையில் முழு முயற்சியுடன் ஆவன செய்யக் காத்திருந்த அருபெரும் தலைவரை இழந்தது சங்கத்திற்குப் பேரிழப்பாகும்.

கடைசியாக அவர் இறக்கும் நாளன்றும் சங்கத்தின் வினைக் குழுக் கூட்டத்திற்கு வந்திருந்தார். செய்கோனிலிருந்து சங்கக் கட்டிட நிதிக்காக அனுப்பியிருந்த பதின்மூன்றுயிரத்திற்கு மேலான தொகைக்குரிய உண்டியற் சீட்டுடன் அன்று (21—4—54) வினைக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டார். இத்தொகையை அனுப்பி யுதவிய பெருமக்கட்கு நன்றி தெரிவிக்கும் கடிதத்தில் இறுதியாகக் கையெழுத்திட்டார்.

கூட்டம் நிகழும்போதெல்லாம் ஓரிடத்தில் முடியு மளவும் இருந்து செல்லுவது அவரால் முடியாது. இடை இடையே சற்று வெளியிற் சென்று வருவது வழக்கம். அம் முறைப்படி அன்றும் வெளியிற் சென்றார். வெளியிற் சென்றவருக்கு வாந்தி ஏற்பட்டு மூச்சுவிட முடியாதபடித் திணறல் ஏற்பட்டது. அங்கிருந்தோர் உடனே சங்க அமைச்சரின் மோட்டார் வண்டியில் தஞ்சைத் தலைமை மருத்துவ நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். மருத்துவ நிலையத்தார் செய்த முயற்சியெல்லாம் பயனின்றிப் போயின. இறுதியில் அவருடைய ஆவி பிரிந்தது. உலகில் பிறப்பதும், இறப்பதும் இயற்கையாயினும், இவ்வாறு புகழ்பட வாழவும், அந்நிலையிலேயே இறக்கவும் உள்ள பெருமக்களைக் காண்டலரிது. நத்தம் போல் கேடும், உளதாகும் சாக்காடும் பெற்ற வித்தகராக விளங்குகின்றார். அவர் புகழ் வாழ்க.

# கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

## இரங்கற் கூட்டம்.

நம் சங்கத் தலைவர், முத்தமிழ் வள்ளல், ஆ. யா. அருளானந்தசாமி நாடாரவர்கள் (21—4—54) புதன்கிழமை இறைவன் திருவடி நீழல் எய்தியமை குறித்து, (26—4—54) திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் சங்க வினைக்குழு உறுப்பினர் திரு. தி. போ. வேதாசலம் பிள்ளை, B. A., அவர்கள் தலைமையில் இரங்கற் கூட்டம் நிகழ்ந்தது. சங்க உறுப்பினர் களும் நகர மக்களும் கூடித் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண் டனர். தலைவரவர்கள், மறைந்த சங்கத் தலைவரவர்களின் சீரிய குண நலங்களை எடுத்து விளக்கினர். தஞ்சை நகரில் பெரிய செல்வந்தராக வாழ்ந்தாலும், எளிய மக்களோடு தொடர்புகொண்டு அவர்கள் நன்மைக் காக உழைப்பதையே தன்னுடைய வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண் டிருந்தனர் என்றும், அந்த மனப்பான்மை யிருந்ததால்தான் தமிழ்ச் சங்கத்திற்கும் பத்து ஆண்டுகளாகத் தலைமையேற்று நெருக்கடியான பல பல சமயங்களிலும் நன் முறையில் பணியாற்றினரென்றும் கூறினர். அடுத்து சங்கத் தலைவர் இறந்த நாளன்று சங்கத்தாரால் பாடிக் கல்லறை மேட்டில் வழங்கப்பெற்ற கையறுநிலைச் செய்யுள் படிக்கப்பெற்றது. பின்னர், அ. சண்முகசுந்தரம் பிள்ளையவர்கள், B. A., மறைந்த சங்கத் தலைவரின் தலைமை ஏற்று நடத்தும் தலைமைக்குணத்தை மிகவும் பாராட்டினர். தலைமைக் குணத்தில் சிறந்தது, குறை சொல்லுவோரின் சொற்களை அமைதியாகக் கேட்டு, குறை சொல்லுபவர்மேல் வெறுப் பின்றி, அக் குறைகளைப் போக்க ஆவன செய்தல் தான் என்றும் இந்த அருங்குணத்தை அவர்கள்பால் தான் அடிக்கடி கண்டுள்ளதாகவும் பேசினர். அடுத்துச் சங்க அமைச்சர், திரு. S. சுயம்பிரகாசம், B A., B. L. M. L. A., அவர்கள் நன்றி கூறும்போது, மறைந்த தலைவரின் குணங்களை நாம் ஒவ்வொருவரும் நன்கு துய்த்து வந்துள்ளோம் ஆதலின், ஒவ் வொருவரும் பல வகையில் பேசலாம் என்றும், அவர்கள் விட்டுச் சென்ற கடமைகளைச் செய்து நிறைவேற்றுவதே சிறந்ததாகும் என்றும் கூறி எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார். பின்னர்த் தலைவரால் நாடாரவர்களின் மறைவுக்கு வருந்துவதாக ஒரு முடிவு படிக்கப்பட்டு, எல்லோரும் சிறிது நேரம் நிற்பதன் மூலம் நிறைவேற்றப்பட்டது.

உ

# தமிழர் கடமை.

திரு. தியாகமோகன், B. A., (Honours), விரிவுரையாளர்,
ஃகூடு பயிற்சிப் பள்ளி, தஞ்சை.

தமிழர் கடமை, இஃதென்ன குறுகியநோக்கு — மனிதர் கடமை என்ற பெரு நோக்கன்றோ பாராட்டுதற்குரியது. மாநிலத்திற்கு மக்கள் ஆற்ற வேண்டிய பணிபற்றிப் பேசுதல் விடுத்து உலக சமுதாயத்தின் ஒரு தினைத்துணை அளவாம் தமிழரின் கடமைபற்றிச் சிந்திப்பதிலே சிறப்பென்னவோ? அச்சிந்தனை இழுக்குடைத்தன்றோ எனப் பகருவர் பலர்.

உலக சரித்திரத்திலே அண்மையில் நிகழ்ந்துள்ள புரட்சிமிக்க நிகழ்ச்சிகளிலே அறிஞர்களின் பாராட்டுதலையும் அரசியல் ஞானிகளின் வரவேற்பையும் ஒருங்கே பெற்ற மாபெரும் நிகழ்ச்சி நாட்டுப்பற்றின் தீவிரத் தோற்றமேயாம். தன் இனத்தின் மீதும், தாய்மொழியின் மீதும் ஒருவன் கொண்டுள்ள பற்றின் அளவேயாம் அவன் உளத்தே கிடக்கும் நாட்டுப்பற்றின் அளவு. ஆதலால் ஒருவன் தன் இனத்தின் மீதும் தான் பிறந்த பொன்னாட்டின்மீதும் அன்பு செலுத்து முகத்தான் அவற்றின் மேம்பாட்டிற்கென சிந்தித்தலும், பேசுதலும், செயல் புரிதலும், பாராட்டுக்குரியதன்றோ? தான் பிறந்த பொன்னாட்டின் மீது பற்றுக் கொள்ளல், மனிதனின் மிக உயர்ந்த கடமையாம் என்பது ஆங்கிலக் கவி டென்னிசன் என்பாரின் கூற்று.

தீந் தமிழ் மொழி மீதும், இவை உலவும் தமிழ் நாட்டின் பேரிலும் அன்பு செலுத்தி நிற்றலும் தமிழர்களின் உயர்ந்த, பரந்த நோக்கமே அன்றி வேறென்னவா யிருக்கமுடியும்? இவ்வாறே மாநிலத்தின் மற்றைப் பகுதிகளில் வாழும் மக்கள் கூட்டத்தினர் யாவரும் தங்கள் தங்களுக்குரிய மொழி, நாடு இவைகளின்மீது பற்றுக் கொள்ளல் வேண்டுமென்பதும் இத்துறைகளில் தங்கள் துயர் களையவும், மேம்பாடடையவும் தக்க முயற்சியிலீடுபடும் உரிமை அன்னாரைச் சார்ந்ததே என்பதும் தமிழ்ப் பெரு மக்களின் உள்ளக்கிடையெனில் உண்மையே யாம். மேலும் உலக மக்களினத்தவர் யாரும் இனிய வாழ்வு பெறவேண்டும்; தமிழ் மக்கள் இனிது வாழ்தல் வேண்டும்; உலக மக்களினத்தவர் யாவருக்கும் அவ்

வினிய வாழ்வு கிட்டவேண்டும்; தமிழ் மக்களின் மேம்பாடு எத்துணையும் பிறமக்களின் மேம்பாட்டிற்குத் தீங்கு விளைப்பதன்று என்ற அவா 'யாம் பெற்றபேறு பெறுக இவ்வையகம்' என்னும் முதுமொழியால் பெறப்படும்.

தமிழர் சமுதாயம் இன்று காணுகின்ற இரங்கத்தக்க நிலையே தமிழ் மக்களின் உள்ளத்தைப் பெரிதும் வாட்டி நிற்கின்றது என்பதில் சிறி தேனும் ஐயமுண்டா? இவ்விழி நிலையை அகற்றும் கடனே இன்றைய தமிழர் கடன் என்பது வெள்ளிடைமலை. தமிழகம் இன்று அல்லற்குட் பட்டிருக்கும் துறைகளான அரசியல், பொருளாதார, சமூக, மொழித் துறைகள் ஒவ்வொன்றிலும் தமிழ் மக்களின் துயர் துடைத்தற்கான நற் செயல் புரிதலே இன்றைய தமிழ் நாட்டுத் தலைவர்களின் சிறந்த பணியாக வும், அறிஞர்களின் ஆர்வத் தொண்டாகவும், செயல் வீரர்களின் சிறந்த குறிக்கோளாகவும் ஆகவேண்டுமென்றால் மிகையாகாது.

தமிழகத்துக்குப் புத்துயிரளிக்கும் இயக்கம் வெற்றிபெற வேண்டு மாயின் தமிழ் நாட்டின் அரசியல் தமிழ் மக்களின் உண்மைத் தலைவர் களின் கைக்கு மாறுதல் வேண்டும். அப்பொழுதே தமிழ் மக்களின் அடிப்படைக் குறைகளைப் போக்கவும் பல்வேறு துறைகளில் மேம்பாடடை யவும் வழி பிறக்கும் என்பது திண்ணம். இந்நோக்கம் ஈடேற தமிழ் மக்களின் பொது நலத்தையே குறிக்கோளாகக் கொண்ட சிறந்த அரசியல் கட்சிகள் உருப்பெறல்வேண்டும் என்பதும் சொல்லாமலே விளங்கும்.

பொருளாதாரத் துறையில் இன்று தமிழ் மக்கள் படுந்துயர் துடைக் கப்படவும் தீவிர நடவடிக்கைகள் இன்றியமையாதனவாகும். தமிழ் நாட்டின் பொருள் வசதி நிலையை உயர்த்தும் முயற்சியிலீடுபடும் தலைவர்கள் தமிழ கத்தின் உழவுத்தொழிலையும், மற்ற தொழில் துறைகளையும் வளர்க்கப் பாடுபடுதல் வேண்டும். இன்று தமிழ் மக்களைப் பெரிதும் வாட்டி வரு கின்ற பசி, பிணி, துன்பம், வேலையில்லாத் திண்டாட்டம் இவைகள் ஒழிக்கப்பட்டு ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உண்ண உணவும், உடுக்க ஆடையும், வசிக்க வீடும் பெறச்செய்தல் வேண்டும்.

தமிழர் சமூகத்திலே இன்று முன்னேற்றப் பாதையைத் தடை செய்து கிடப்பவை சாதிப் பிரிவினையும், பொருளாதார ஏற்றத் தாழ்வும், பெண்களின் கீழ் நிலையும், கல்வி இன்மையுமாம். இவையேயன்றி நெடுங்காலமாக மக்களைப் பீடித்துவரும் மூட நம்பிக்கைகளும் பயனற்ற பழக்க வழக்கங்களும் நம்மிடையே பெருந் தீங்கு விளைத்து வருகின்றன. சாதிவேற்றுமையை ஒழிக்கவும், பொருளாதார நிலையில் மக்கள் யாவருக்

கும் சமநிலை அளிக்கவும், பெண் சமூகத்தினரை முன்னேற்றவும் மக்களிடையே கல்வியை வளர்க்கவும் ஆக்கம்தேடிப் பணிசெய்யவேண்டிய கடமை தமிழ்ப் பெருமக்களைச் சார்ந்ததாகின்றது.

தமிழகத்தின் ஒப்புயர்வற்ற செல்வமாம் தீந்தமிழ் இன்று தன்னிலையிழந்து மங்கிக் கிடக்கும் நிலையைத் தமிழ் மக்கள் எவ்வண்ணம் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்? இன்று உயிரற்ற மொழிகளெனக் கருதப்படும் இலத்தீன், வடமொழி போன்றவையும் அந்நாட்டு மக்களால் பெரிதும் காப்பாற்றப்பட்டு வருங்கால் இன்று தமிழ் இல்லங்களிலே ஊர்ந்து, தவழ்ந்து, குறுநடை பயின்று நிற்கும் தேனினுமினிய தமிழ் மொழியின் மீது ஆர்வங்காட்டுதலிலே வியப்பென்ன இருக்கின்றது? அப்படியிருக்க நந்தாய்மொழி, உலகத்து ஒப்புயர்வற்ற திருக்குறள்போன்ற நல்ல நூல்களைப் பெற்றமொழி, மாநிலத்து மாந்தரெலாம் உலகத்து மொழிகளிலெல்லாம் இனியது என்று இயம்பியுள்ள தமிழ் மொழி எத்துணைப் போற்றுதலுக் குரியது என்பது சொல்லாமலே பெறப்படும். தமிழ் மக்களின் வாழ்வில் இயல், இசை, நாடகமென்னும் முத்தமிழும் கலந்து நின்று இன்பம் பயக்கும் நன்னாள் வரப்பெறுதல் வேண்டும். மேனாட்டு மொழிகளிலே சிறந்துநிற்கும் நூல்கள் யாவும் தமிழ் மொழியில் யாத்தல் வேண்டும். இன்று தமிழ் மொழியின் முடியிலே இரத்தினங்களென விளங்கும் குறள் போன்ற நூல்கள் பிறநாட்டவர்க்கும் பயன்படுமாறு இவைகளைப் பிற மொழிகளில் ஆக்கல் வேண்டும். இத்துணை வாய்ப்பும் கிட்டும் நாள் என்றோ அன்றே தமிழர் உள்ளத்தில் பெருமிதம் கொள்ளும் நன்னாளாகும்.

இத்துறைகள் ஒவ்வொன்றிலும் தமிழ் மக்கள் முறை பிறழாது தங்கள் கடமையை ஆற்றுதலென்பது எளிதன்று. இருப்பினும் இதற்குரிய மனத்தெளிவும், துணிவும், திறனும் இன்றைய தமிழ் மக்களிடையே காணுதற்கரிதன்று. உலகில் எங்கேனும் எம் மக்களேனும் எத்துறையிலேனும் தங்கள் நிலையை மேம்படுத்திக்கொள்ளமுயன்று வெற்றிபெற்றிருக்கின்றனரேயாகில் அவ்வெற்றிக்கும் மேம்பாட்டிற்கும் அம்மக்களின் தெள்ளிய நோக்கும், தீவிர உழைப்புமே பெரிதும் காரணமாகும். தங்களை அடிமைகொள்ள எண்ணி ஏவப்பட்ட ஆர்மடா கடற்படையைவென்று துரத்திய ஆங்கில மக்களின் துணிவும், பிரஞ்சு மக்களின் உரிமையை மீட்கத் துணிவுடன் செயல் புரிந்த விழுமிய சிறுமி ஜோன் என்பாளின் நெஞ்சுரமும் தமிழ் மக்களுக்கு அரிதாமோ?

# 'பண்புச் சோலை'

புலவர் ச. அருணாசலம், தமிழாசிரியர்,
கால்டுவெல் நினைவு உயர்நிலைப்பள்ளி,
இடையன்குடி. (திருநெல்வேலி மாவட்டம்)

"சிரிக்கும் முகம்; சிரிக்க வைக்கும் சிந்தனைப் பேச்சு; ஆனாலும் பயன்தரும் கருமேகத்திலே பளிச்செனமின்னி மறையும் ஒளிக்கீற்றுப் போலத் தோன்றும் சிறு சினம்; தளர்ந்த பருவத்தினராய்த் தெரிந்தாலும் தளரா நடை; வழுக்கு உலகிலே வாழ்விக்கும் ஒழுக்கமென உதவுமோர் ஊன்றுகோல்; தன் உயர்வு நினைப்புக்குத் தாழ்விலா வகையில் போராடும் திண்மை"—இத்தனைப் பண்புகளையும், பொருட்களையும் ஓருருவாக்கி, இணைத்துப் பார்த்தால் காணப்படும் நடமாடும் 'கலைக்கழக'ந்தான், கவியரசர் வேங்கடாசலனார்.

காட்சிக்கெளிமை, கடுஞ்சொல் இல்லாமை, 'உழுத நோன்பகடு அழி தின்றாங்கு' வாழும் பொதுநல எண்ணம், 'கடிதோச்சி மெல்ல வெறியும்' ஆட்சித்திறன் ஆகிய 'தலைமைப் பண்பு'களின் தங்குமிடந்தான், கவியரசர் வேங்கடாசலனார்.

'நகை, ஈகை, இன்சொல், இகழாமை நான்கும்' வகையாக அமைந்த வாய்மைக் குலன், 'வாலறிவன்' வழி நடக்கும் உயர் கொள்கை, எமர் நமரென்னாது எல்லோரிடத்தும் கொள்ளும் பரந்த விருப்ப வுணர்வு, தன்மதிப்புக் குறைக்கும் தருக்கின்மை, கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை, பெருமையும் திண்மையும் பொறையும் பொருந்தி அடுத்து வருவோர்க்கு ஆக்கம் தரும் நிலப்பண்பு, நிறைந்த பொருளும் தோற்றமும் வற்றா வளந்தரும் வண்மையும் அமைந்த மலைபோலக் கருத் தூற்றாய் விளங்கும் தன்மை,

'ஐயந்திரப் பொருளை யுணர்த்தலும் மெய்ந் நடு நிலையும் கொண்ட நிறை கோல்' மாண்பு, 'யாவரும் மகிழ்ந்து மேற் கொள மெல்கிப் பொழுதின் முகமலர்வுடைய பூ'வின் மாட்சி ஆகிய 'ஆசிரியரியல்பு'களின் இருப்பிடந்தான், கவியரசர் வேங்கடாசலனார்.

ஆம்! கவியரசர் வேங்கடாசலனார்—கருத்துச் சுரங்கம்—நகைச்சுவை ஊற்று—ஆய்வுச் சாலை—மாணவர் உளத்தில் எழும்பிய 'தாஜ்மஹால்' என்றே கூறிவிடலாம்.

மிகச் சுருங்கக் கூறின், தமிழகம் கண்ட "பண்புச் சோலை" அவர்!

---

# திருக்கோவையார் - உரையாசிரியர்.

வித்துவான் K. M. வேங்கடராமையா, M. A., B. O. L.,
தலைவர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

**நூற்பெயர்**

"அறிவாற் சிவமே" என்று போற்றப்பெறும் மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது திருக்கோவையார். இக் கோவையொன்றே 'திருக்கோவை' என்று 'திரு' என்ற அடையோடு திகழ்வது. "ஆரணங்காண்" என்ற பாடலில் இது "திருச்சிற்றம்பலக் கோவை" என்று கூறப்பெறுகின்றது. நம்பியாண்டார் நம்பிகள் 'கோயில் திருப் பண்ணியர் திருவிருத்தத்தில்' (செ. 58-ல்) "திரு வாதவூர்ச்சிவ பாத்தியன் செய் திருச்சிற்றம்பலக் கோவை" என்று குறித்துள்ளார்.

**உரையோடு கூடிய திருக்கோவைப் பதிப்புக்கள்.**

திருக்கோவையார் உரையுடன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களால் பலதடவை பதிக்கப் பெற்றது. அவ் வுரை நூல் கிடைத்தற்கரிதாகியதை யுணர்ந்த திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பன்னிரு திருமுறைகளையும் பதிப்பிக்கும் பொழுது கர ஆண்டு, மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் திருக்கோவையார் உரையுடன் அச்சிட்டு அருளினார்கள்.

**உரையாசிரியர் யார்? நச்சினார்க்கினியரா?**

திரிசிரபுரம் மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் "திருக்கோவை யாரெனும் தெய்வமா மறையைப், பழமறை தெரிந்த பாரத்து வாச, நச்சினார்க் கினியர் நவின்ற பேருரையொடு.........அச்சில் வயக்கி முடித்தனன்......ஆறுமுக நாவலனே" என்றதால் இதற்குரை இயற்றினார் நச்சினார்க்கினியர் என்பது மகாவித்துவான் அவர்களுடைய கொள்கையென அறியலாம். "மணிமேகலை நூல் நுட்பங் கொள்வதெங்ஙன், சிந்தாமணியும் திருக்கோவையும் எழுதிக் கொளினும் நந்தா வுரையை எழுத எவ்வாறு நவின்றருளே" என்ற வெங்கைக் கோவையில் சிந்தாமணியொடு திருக்கோவையைத் தொடர்பு படுத்துவது போல் காணப்படுகிறது. இதன் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் அல்லர் என்பதைப் பின்வரும் சான்றுகளால் அறியலாம்:—

"1. 'மூவல் தழீஇய அருள் முதலோன்' (செ. 191) என்பதன் உரை விசேடத்தில், 'பாலைக்கு நிலம் இன்மையின் நானிலம் எனப் பட்டது' என்று உரையுளது. தொல்காப்பியத்து அகத்திணையுள்ளும் கலித்தொகைக் கடவுள் வாழ்த்துள்ளும், சிந்தாமணி 2106-ம் செய்யுள் உரை விசேடத்துள்ளும், சிறுபாணாற்றுப்படை யுரையுள்ளும் நச்சினார்க்' கினியர் பாலைக்கு நில முண்டென்றார். எனவே அவரின் வேறுபட்டவர் இந் நூலின் உரையாசிரியர் என்க

2 குறிஞ்சி முதலியவை ஒழுக்கத்தாலாயின என்பது நச்சினார்க் கினியர் கருத்து. பூவாலாயின என்பது இவ் வுரையாசிரியர் கருத்து.

3. 'எளிதன்று இனிக்கனிவாய் வல்லிபுல்லல்' (செ. 50) என்று தொடங்குவதன் உரை விசேடத்தில், "இரண்டாவது விகார வகையால் தொக்கது. வல்லியது புல்லல் எனினும் அமையும்" என்றுளது. தொல். எழுத்து 157 உரை, சிந்தாமணி 1560-ம் பாட்டுரை என்பவற்றை நோக்கின் நச்சினார்க்கினியார்க்கு அஃது உடம்பாடன்று என்பது விளங்கும்

4. திருக்கோவை யுரையாசிரியர் வினைமுற்றே எச்சமாகும் என்றார் (செ. 83, 205, 382) நச்சினார்க்கினியர் வினையெச்சமே முற்றாகும் என்றார். எச்சத் திரிபுபற்றி இருவர் கருத்தும் வேறுபடல் அறியலாம்.

5. காமர் என்பதற்கு (செ. 352) அழகு என்று பொருள் கூறினார் இவ் வுரையாசிரியர். நச்சினார்க்கினியர் காமம் மருவு என்னும் இருசொல் லின் மரூஉ வெனக் கொண்டு விருப்பம் என்று உரைத்தார்.

6. செய்தென் எச்சம் பிறவினை கொள்ளாது என்பது இவ்வுரை யாசிரியர் கருத்து; கொள்ளும் என்பது நச்சினார்க்கினியர் கருத்து." (—திருக்கோவையார் உரை காசிமடத்துப் பதிப்பு-முன்னுரை-பக்கம் X-தருமையாதீனப்புலவர், வித்துவான் திரு முத்து. சு. மாணிக்க வாசக முதலியார் அவர்கள்).

"பாரத்தொல் காப்பியமும் பத்துபாட் டுங்கலியும்
ஆரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்கும்—சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே"

என்ற பாடலில் திருக்கோவை குறிக்கப்பெறவில்லை யாதலினாலும் திருக் கோவைக்கு நச்சினார்க்கினியர் உரையியற்றினாரல்லர் என்பது தெளிவு.

**சேனுவரையரா ?**

தஞ்சைவாணன் கோவை யுரை ஆசிரியராகிய குன்றத்தூர்ச் சொக்கப்ப நாவலர் இரண்டிடங்களில் திருக்கோவை யுரைக்கு மறுப்புரை எழுதுவர். அவை வருமாறு :—

1. 'புயலே சுமந்து' என்ற பாடலுரை: "திருக்கோவையாருரையில் காட்சிச் செய்யுட்கு மெய்ப்பாடு உவகை யென்று சேனுவரையர் எழுதினுரே எனில் உவகையாகாது; என்னை ? கண்ட பொருளான் நெஞ்சின் மயக்கந்தோன்றி ஒன்றை யொன்ருகக் கூறுதலின் மருட்கையேயாம் என்க."

2 'பால்போல் மொழி' என்ற (68-ம்) பாடலுரை : "சிற்றம்பலக் கோவையில் (செ. 70) நாண நாட்ட நடுங்க நாட்டத்தைப் பெருந்திணைப்பாற்படும் என்று சேனுவரையர் உரை கூறினுரால் எனின், அவர் கூறிய உரைக்கு மாறுகொளக் கூறல் என்னும் குற்றம் தங்கும்".

இவ்விரண்டிடத்தும் அச்சிட்ட தஞ்சை வாணன் கோவைப் பிரதிகளுள் பேராசிரியர் என்ற பாடம் தரப்பெற்றுள்ளது. அடிக்குறிப்பில், "சேனுவரையர் என்று ஏடுகளிற் காணப்படலால் இவ் வுரையாசிரியர் கருத்து அது போலும் என்று ஊகிக்க இடனுண்டு" என்று காணப்படுகிறது. திருக்கோவை உரைப் போக்கே அது சேனுவரையருடையதன்று என்பதை விளக்கும்.

**பேராசிரியரா ?**

பிரயோக விவேக வுரையில் திருக்கோவையார் உரையினைப் பேராசிரியர் உரையெனவே குறிக்கப் பெற்றுள்ளது அப்பகுதிகள் வருமாறு:—

1 36ம் செய்யுளுரை ; 'வஞ்சரையஞ்சப்படும்' என்னும் குறளினும், 'கொள்ளப்படாது மறப்பதறிவிலென் கூற்றுக்களே' என்னும் திருக்கோவையாரிலும் பரிமேலழகரும் பேராசிரியரும் முதனிலையைப் பிரித்து எழுவாயாக்கி முடித்தலுங் காண்க.

2. 39-ம் செய்யுளுரை ;—'மருங்கோடித் தீவினை செய்யான் எனின்' 'கற்றில கண்டன்னம்' என்னும் குறளினும் திருக்கோவையாரினும், பரிமேலழகரும் பேராசிரியரும், செய்தலோடும் கற்றலோடும் முடியும் என்பர்.

3. 41-ம் செய்யுளுரை ;—இனி 'உள்ளப்படுவண' எனவரும் திருக்கோவையாருள், சொற் சோதனை காட்டிய 'வஞ்சரை யஞ்சப்படும்' என்பதற்கு அஞ்சத்தகும் என்பர் பேராசிரியர்.

எனவே திருக்கோவை உரையாசிரியர் பேராசிரியர் என்றே துணியலாம். இதுவே திராவிடப் பிரகாசிகை ஆசிரியர் திரு. சபாபதி நாவலர் அவர்கள் கருத்துமாம்.

தொல்காப்பியப் பொருளதிகார உரையாசிரியராகிய பேராசிரியரும் திருக்கோவையாருரை யாசிரியராகிய பேராசிரியரும் ஒருவரா ? வேறு ?

தொல்காப்பியப் பொருள் அதிகாரம் பின் நான்கியல்களுக்குப் பேராசிரியர் உரை கிடைத்துள்ளது. கிடைத்த அவ்வுரைப் பகுதிகளினின்று (அ) தொல்காப்பியம் பொருள்—களவியற்கு உரையியற்றினர் என்பது, மெய்ப்பாட்டியல் 18-ம் சூத்திரவுரையுள் அவர் கூறியுள்ளமையானும், (ஆ) அகத்திணையியற்கு அவருரையுண்டு என்பது, மெய்ப்பாட்டியல் 19-ம் சூத்திரவுரையில் அவர் கூற்றினாலும் அறியலாம்.

1. இங்ஙனம் பிறவியல்கட்குத்தான் உரையியற்றியமையைக் குறித்து வந்த பேராசிரியர், தொல்காப்பிய உரைப்பகுதியுள் திருக்கோவைக்குத் தான் உரை எழுதியதாகக் குறிக்கவில்லை. அன்றியும் திருக்கோவையுரையுள் தான் தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்கு உரையெழுதியதாகவும் குறிக்கவில்லை.

2. பேராசிரியர் என்ற பெயருடையார் சிலர் கேட்கப்படுகின்றனர். தொல்—பொருள்—உரையாசிரியராகிய பேராசிரியர் தன்னின் வேறாக, 'வலம்புரி முத்தின் குலம்புரி பிறப்பும்" என்ற பொதுப்பாயிரம் இயற்றியவர் ஆத்திரையன் பேராசிரியன் என்று ஒருவரையும் குறித்திருக்கிறார் மரபியல் 98-ம் சூத்திரவுரை).

3. அ. திருக்கோவையுரை, 'மெய்ப்பாடென்பது புறத்துக்கண்டதோர் பொருள் காரணமாக நெஞ்சின்கட்டோன்றிய விகாரத்தின் விளைவு" என்று எளிமையாகவுள்ளது. மெய்ப்பாட்டியல் உரையோ "மெய்ப்பாடு என்பது பொருட்பாடு; அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல்" என்று கூறும்.

ஆ. திருக்கோவையுரை (செ. 31) "நிறை—ஐம்பொறிகளையுமடக்குதல்" என்னும்; தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் 25-ம் சூத்திரவுரையுள் "நிறையென்பது மறைபிறரறியாமை நெஞ்சினை நிறுத்துதல்" என்பர்.

இ. திணை முதலிய பத்திலக்கணம் கூறுகையில் திருக்கோவை 5-ம் செய்யுளுரையில் "இடம்—முன்னிலை" என்று குறிக்கப் பெற்றுள்ளது.

தொல்—செய்யுளியல் 201-ம் நூற்பா "ஒரு நெறிப்பட்டாங் கோரி யன் முடியும், கரும நிகழ்ச்சி யிடமென மொழிப" என்பது. இது களன் என்னும் உறுப்பை யுணர்த்தும்.

இச் சூத்திர உரையில், "இடம் எனினும் களமெனினும் ஒக்கும் ஒரு செய்யுள் கேட்டால் இஃது இன்ன விடத்து நிகழ்ந்ததென்று அறிதற் கேதுவாகியதோர் உறுப்பினை இடமென்றான் என்பது.........காட்சியும் ஐயமும் துணிதலும் புணர்ச்சியும் நயப்பும் பிரிவச்சமும் வன்புறையுமென் றின்னோரன்ன வெல்லாம் ஒரு நெறிப்பட்டு இயற்கைப் புணர்ச்சி என்னும் ஓரிலக்கணத்தான் முடியுமென்பது கரும நிகழ்ச்சியென்பது, காமப் புணர்ச்சி யென்னும் செயப்படுபொருள் நிகழ்ச்சி! அஃது இடமெனப் பட்டது. இது வினை செய்யிடம். "எலுவ சிறுஅர்"........என்னும் பாட்டும் பாங்கற் கூட்டமே இடனாக ஒருவழிப்பட்டன" என்பர் பேராசிரியர்.

இந்நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் விளக்கமும் இங்ஙனமே அமைந் துள்ளது.

இளம்பூரணர், "ஓரியல் முடிதலாவது, அகத்தின்கண்களவென்று னும் அவற்றின் விரிவகையில் ஒன்றானும்பற்றி வருதல்..............கரும நிகழ்தலாவது, அப்பொருள்பற்றி யாதானு மொருவினை நிகழுமிடம், இன்னும் கரும நிகழ்ச்சி என்றதனால் தன்மை முன்னிலை படர்க்கை என் பதையும் கொள்ளப்படும்" என்பர்.

இறையனார் களவியலுரை, "ஒருவர் கூற ஒருவர் கேட்கும் இடம் அவை தன்மை முன்னிலை படர்க்கை என்பன" என்று கூறும்.

எனவே 'இடம்' என்பது குறித்துத் திருக்கோவை யுரையாசிரியர் கருத்துத் தொல்—உரையாசிரியர்களாகிய பேராசிரியர்—நச்சினார்க்கினி யர் கருத்துக்களோடு பொருந்தாமையும், இளம்பூரணர்—களவியலுரையா சிரியர் கருத்துக்களோடு ஒத்து வருதலும் காணலாம்.

ஈ. திருக்கோவை யுரை. "பயன் என்பது நெஞ்சின் அடுத்த தோர் மெய்ப்பாடு காரணமாகத் தன் வயின் நிகழ்ந்த சொல்லான் எய்து வது" என்னும், "இது மிகவும் பயக்கும் இதனான் எனத் தொகுத்துச் சொல்லப்படும் பொருள் பயன் என்னும் உறுப்பாம்" என்பது பேரா சிரியருரை. இவ்விரண்டு கருத்துக்களும் வேறுபாடுடையனவே.

4. திருக்கோவை யுரையில்—இல் பொருளுவமை அபூதவுவமை (125), இரங்கல்விலக்கு, உபாய விலக்கு (157), பரியாயம் (161); அல் பொருள் தற்குறிப்பேற்றம் (185); புகழாப் புகழ்ச்சி (202)' உயர்ச்சி வேற் றுமை (217); முயற்சி விலக்கு (234)—என்ற அணிகளைக் குறிப்பர். யாண்டும் அணி யென்னுது "அலங்காரம்" என்ற சொல்லையே ஆள்வர்.

உவமவியலுரையில் 'அலங்காரம்' என்ற சொல் ஓரிரண்டிடங்களிற் பயின்றுளது; 'அணி' யென்றே யாண்டுமுளது. அன்றியும் அவர்க்குச் செய்யுட்கண்ணே அணியுண்டெனக் கூறுதலும் உடம்பாடன்று, இதனை உவமவியல் இறுதிச் சூத்திரவுரைப் பகுதியான் அறியலாம். அவ்வுரை வருமாறு :—

"இவ்வோத்தின்கட் கூறுகின்ற உவமங்களுட் சில வற்றையும் சொல்லதிகாரத்தினுள்ளும் செய்யுளியலுள்ளும் சொல்லுகின்றன சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு, மற்று அவை செய்யுட் கண்ணே அணியாமென இக்காலத்தாசிரியர் நூல் செய்தாருமுளர். அவை ஒருதலை யாகச் செய்யுட்கு அணி என்று இலக்கணம் கூறப்படா. என்னை? வல்லார் செய்யின் அணியாகவும், அல்லார் செய்யின் அணி யன்றாகியும் வரும். தாம் காட்டிய இலக்கணத்திற் சிதையா வழியும் என்பது......... ......அல்லதூஉம் பொருளதிகாரத்துப் பொருட்பகுதியெல்லாம் செய்யுட் கணி யாகலான் ; அவை, 'பாடலுட் பயின்றவை' யெனப்பட்டன என்ற தான் அவை யெல்லாம் தொகுத்து அணி யெனக் கூறுது. வேறு சில வற்றை வரைந்து அணி யெனக் கூறுதல் பயமில் கூற்றாம் என்பது...... ......இனி, அவற்றைப் பொருளுறுப்பென்பதல்லது அணி யென்பவாயின் சாத்தனையும் சாத்தனுலணியப்பட்ட முடியும் தொடியும் முதலாயவற்றை யும் வேறுகண்டாற்போல அவ்வணியும் செய்யுளின் வேறாகல் வேண்டும் என்பது........."

5. 'பொருளால் தொடர்புடையதாதலின் கோவை தொடர்நிலைச் செய்யுளின் பாற்படும்' என்பதை, "கோவையும் தொகையுமாவயின் வரையார், என்பதினுல் இது தொடர் நிலைச் செய்யுளாதலின்......... " என்று திருக்கோவை 252-ம் செய்யுளின் உரையுள் கூறப்பெற்றதனின்று அறியலாம்.

ஆனல் மெய்ப்பாட்டியல் உரை வகுத்தவருக்கோ கோவைப் பிரபந் தத்தைத் தொடர்நிலைச் செய்யுளாகக் கருதுதல் உடன் பாடன்று, என் பதைப் பின் வருவன வற்றால் அறியலாம் :—

"யாழோர் கூட்டத்தினைத் தொன்மையும் தோலும் போலப் பொருட்டொடர் நிலையாக்கி உரைப்பாருமுளர். அஃது ஆகாமைக்குக் காரணம் களவியலுட்கூறினும்" (மெய்ப்பாட்டியல் 18-ம் சூத்திரவுரை).

இதுகாறும் எடுத்துக்காட்டிய ஏதுக்களான் தொல்காப்பியத்துக்கு உரைவகுத்த பேராசிரியரும், திருக்கோவையாருக்கு உரை வகுத்த பேரா சிரியரும் ஒருவர் அல்லர், வேறு வேறனவர் என்பது பெறப்படும்.

இனிப் புன்னாலைக்கட்டுவன் திரு. சி. கணேசையர் தம் பொருளதி காரப் பதிப்பில், உரையாசிரியர் எனும் பகுதியில் எழுதியது பின்வரு மாறு:—

திருக்கோவையார் உரையாசிரியரும் பேராசிரியர் எனப்படுதலின் அவரும் இவரின் (தொல்காப்பிய உரையாசிரியரின்) வேறாயவர் என்பது அவருரைப் போக்காலே அறியப்படும். ஆயினும் சில சொல்லாட்சி ஒப்புமைகொண்டு அவரும் இவரும் ஒருவரே யாவர் என்பாரும், சில சொல்லாட்சியளவில் இருவரையும் ஒருவரெனல் கூடாதெனக் காரணங் காட்டி மறுப்பாருமுளர். சிலர் திருக்கோவையார் உரையாசிரியரும் ஆத் திரையன் பேராசிரியரும் ஒருவரேயாவர் என்பர்.'

**பேராசிரியர் உரைக்குமுன் வேறு உரைகளும் உண்டு.**

1 திருக்கோவை 299-ல் "முரசும் திகழும் எனற்கு முருகும் கமழும் என்று பாடமோதி, கலியாணத்திற் குறுப்பாம் நறுவிரை நாறு நின்றன என்று உரைப்பாருமுளர்" என்னும் செய்யுள் 235-ல் "நல சேட்டைக் குலக்கொடியே எனற்கு நலசேட்டை குலக்கொடியே யென்று பாடமோதிச் சேட்டையாகிய தெய்வத்தின் நல்ல கொடியே யென்று உரைப்பாருமுளர்" என்றும், இவ்வாறு பல இடங்களில் பிறர் பாடமும் உரையும் கூறுவதாலும்; (2) "தில்லை மாதோ (செ. 2) என்பதற்குத் தில்லைக்கண் வாழ்வாரோர் மானுட மாதரோ என்று உரைப்பாருமுளர், தில்லை மானுட மாது மகளிர்க் குவமையாகப் புணர்க்கப் படுவன வற்றி னொன்றன்மையால் உவமை யாகாது, உவமிக்கப்படும் பொருளெனின் ஐயமின்றித் துணிவாம். அதனால் தில்லைமாதோ என்பது, மானுட தெய்வம் என்னும் வேறுபாடு கருதாது, மகளிர் என்னும் பொதுமைபற்றி நின்றது" என்று பிறர் உரை கூறி மறுத்தலினாலும், பேராசிரியர் உரைக்குமுன் வேறுரைகளுமுண்டு என்பது துணிபு.

## வேறுரைகளுள் ஒன்று :
## தஞ்சை சரசுவதி மால் வெளியீடு:—

மேலே கூறியபடி இந்நூலுக்கு வேறுரைகளிருப்பதை அவ்வுரை யினின்று அறிந்தபோதிலும் அத்தகைய வேறு உரை நூல்களுள் எவையும்

இதுகாறும் வெளிவரவில்லை. அண்மையில் தஞ்சாவூர் மகாராஜா ஸ்ரீசரபோஜி ஸரஸ்வதி மஹால் நூல் நிலையத்தார் திருக் கோவையாருரையொன்றை வெளியிட்டுள்ளனர்.

இவ்வுரையைக் குறித்து இந்நூற்பதிப்பாசிரியராகிய திரு. இராம விசுவநாத ஐயர் அவர்கள் கூறியது பின் வருமாறு:—

"பொருள் செல்லும் முறையிலும் நடையிலும் முன்னே அச்சில் வெளிவந்த உரையினின்றும் இவ்வுரை முற்றிலும் வேறானது. பேராசிரியருடையதென வழங்கும் உரையில் காணப்பெறுவதுபோல விளக்கவுரைகளோ இலக்கண முடிபுகளோ இதனிற் காணப்படாமற் போயினும் பற்பல இடங்களில் இவ்வுரை காட்டிச் செல்லும் பொருள் நயங்கள் போற்றத்தக்கனவாயிருக்கின்றன. இவ்வுரையில் கொளுக்களுக்கு உரைகள் குறிக்கப்பட்டுள்ளன. பேராசிரியர் உரையில் சுட்டப்பெறும் "வேறுரை" களிற்பல இவ்வுரையிற் காணப்படுகின்றமையாலும், அதனில் காட்டப்பெறும் பாடபேதங்களுள் சிலவற்றை இவ்வுரை கொண்டிருத்தலாலும், வடமொழிக் கலப்பமைந்த இவ்வுரையைச் செப்பனிட்டது போலவே பலவிடங்களில் பேராசிரியருரை காணப்படுதலாலும் இவ்வுரையே முந்தியதாயிருக்கலாமென்று ஊகிக்க இடமுண்டாகிறது.

இனித் திருக் கோவையாரின் சிறப்புக் கூறும் பாடலைக் கூறி இக் கட்டுரையை முடிக்கிறேன்:—

உருவாருந் தமிழ்ச்சங்கத் தடம்பொய்கைத் தோன்றி
உயர்ந்தோங்கு மெய்ஞ்ஞான வொளியையுடைத் தாகி
மருவாருங் கிளவியிதழ் நானூறு ஆகி
மதுப் பொருள் வாய் மதிப்புலவர் வண்டாக வுண்ணத்
தருவாரும் புலியூரின் உலகுய்யக் குனிப்போன்
தடங்கருணை எனும்இரவி தன்கதிரால் அலரும்
திருவாத வூராளி திருச்சிற்றம் பலவன்
திருவடித்தா மரைச்சாத்துந் திருவளர்தா மரையே!

# தமிழ் மொழி.

வித்துவான், S. தாமஸ் உடையார்.

சீரிலகும் மொழியே!—எங்கள்
செல்வத் தமிழ் மொழியே!
பாரின் முதல் மொழியே!—கலைப்
பண்பு நிறை மொழியே!
ஆரியம் வந்திடுமுன்—உல
காண்டிருந்த மொழியே!
வாரி யமுதினிலும்—சுவை
வாய்ந்த தமிழ் மொழியே!
தடவரையில் முனிவன்—அன்று
தந்த தமிழ் மொழியே!
வடவேங்கடம்குமரி—யிடை
வாழ்ந்திருந்த மொழியே!
புடவி மன்னர் மடிமேல்—வைத்துப்
போற்றுந் தமிழ் மொழியே!
கடலிலே மூழ்காமல்—முன்னோர்
காத்துவைத்த மொழியே!
காலிற் சிலம்பணிந்து—இரு
கையில் வளை பூண்டு
கோலச் சிந்தாமணியைச்—சிரம்
கொண்டுவளர் மொழியே!
தோளிற் புரண்டிடவே—மணி
மேகலைத் தூசணிந்து
ஏவச் செவியினிலே—குண்டலம்
ஏற்றுத் திகழ் மொழியே!
சூழ்வினையா லுயர்ந்த—சில
தொன்மொழி போலழியா
தூழ்வினை தன்னையுமே—வென்று
உயரும் தமிழ் மொழியே!
தாழ்வில், பிறநாட்டார்—முற்றும்
தங்கிய நாளினிலே
வாழ்வி னிலக்கணங்கள்—கண்டு
வகுத்த தமிழ் மொழியே!
வள்ளுவனார் மொழியே—மணி
வாசகர் பாட்டினிலே

உள்ளம் அனல் மெழுகாய்க்—குழைந்
துருக விடும் மொழியே!
தெள்ளு தமிழ்ப் புலவன்—கவிமணி
செப்பும் தமிழினிலே
வள்ளல் அருணகிரி—அருள்
வாக்கி லொளிர் மொழியே!
இன்னிசை வீணையிலே—குழல்
யாழின் இசையினிலே
பின்னியிழைந்து வரும்—வளம்
பெற்ற தமிழ் மொழியே!
கன்னியர் பேச்சினிலே! அவர்
கடைக்கண் வீச்சினிலே!
மின்னித் தவழ்ந்துகளி—நட
மிட்டுவரும் மொழியே!
காதல் மொழியாகி—பின்னர்
கற்பின் மொழியாகி
வேத மொழியாகி—இன்ப
வீடுதரும் மொழியே;
கோதில் சிறுவருளம்—தனில்
கொஞ்சும் மொழியாகி
ஆதிக் கடவுளுக்கே—தொண்டர்
ஆக்கும் அருள் மொழியே!
நெற்றிக்கண் காட்டிடினும்—குற்றம்
குற்றமே யென்றுரைத்த
நற்றமிழ்ச் சொற்கீரன்—புகழ்
நாட்டிய தூமொழியே!
கொற்ற முடிபுனைந்து—செங்
கோல் பிடித் தெவ்வுலகும்
வெற்றி முரசடித்து—நீ
விளங்கக் காண்பேனோ?
எத்திசையும் மதிக்கக்—கொடி
யேற்றி இமயமதில்
கட்டியர சாண்ட—எங்கள்
கன்னித் தமிழ் மொழியே!
நத்துமுன தழகைப்—பிற
நாட்டவரும் ரசிக்கப்
புத்தம் புதுக்கலைகள்—கொண்டுநீ
பொலிவுறக் காண்பேனோ.

# இரங்கற் செய்தி.

## மரவாடி ஸ்ரீ இராமாநுசசுவாமிகள்

மு. சடகோபராமாநுசம் பிள்ளை. விரிவுரையாளர்
கரந்தைப் புலவர் கல்லூரி.

இவர்கள் தோற்றம்: தில்லை திருச்சித்திரக் கூடத்தில் 1866-ஏப்ரல் மாதம். மறைவு: 1954-ஜனவரி. இவர்கள் முன் கூறியபடி தில்லை நகரில் தோன்றி கருவிலே திருவுடையவராய்ப் பயன் கருதாது நந்தவனம் அமைத்து இறைவனுக்குத் திருமாலை சமைத்துக் கொடுக்கும் தொண்டில் ஈடுபட்டிருந்தார்கள். புவனகிரி ஏகாங்கி சுவாமிகள் முதலான பல பெரியோர்களை அடுத்து வைணவ சமய சம்பந்தமான நூல்களை ஐயமறக்கற்றுத் தெளிந்தவர்கள். ஓரளவு இலக்கண, இலக்கியப் பயிற்சியும் உடையவர்கள். இவர்கள் அப்பக்கத்துள்ள வைணவர்களுக்குச் சமயத்தில் பற்றுண்டாகும் படிச்செய்து அடிப்படையான நூல்களையும் சமய நூல்களையும் பாடம் சொல்லி வந்தார்கள். இவர்கள் ஈடு முதலியவைகளை நூலின்றியே பத்திப் பத்தியாக ஒப்பிக்கும் மனப்பாடம் வாய்ந்தவர்கள்.

1914-ஆம் ஆண்டு புவனகிரி அழகியமணவாள ஏகாந்தி சுவாமிகள் முதலிய பல பெரியோர்கள் உதவியால் நிறுவப்பெற்ற ஸ்ரீமத் இராமாநுச தரிசன வித்தியாசாலையைத் திறம்பட நடத்தி வந்தார்கள். அவ்வித்தியா சாலையின் தாளாளராகவும் இறக்கும்வரை இருந்து வந்தார்கள். அவ்வித்தியாசாலையில் பயின்று புலமைபெற்று வெளியிடங்களில் தமிழ்த் தொண்டாற்றிவரும் மாணவர் பலர். இவர்கள் திருப்பாவையைப் பண்ணிசையோடு பாடுவதற்குத்தக்க ஆசிரியரொருவரை அமைத்துத்தக்க முறையில் மாணவர்களைப் பயிலும்படிச்செய்து வந்தார்கள்.

30—3—1936-ல் வர வர முனி பாடசாலை என்ற பெயரோடு வேறொரு பள்ளியையும் நிறுவினார்கள். அது இளைஞர் பயிலுவதற்குப் பள்ளியே இல்லாத ஓரிடத்தில் அமைந்திருக்கின்றது; அதனால், அப்பக்கங்களிலுள்ள சிறுவர்கள் பயிலுவதற்குத் தகுதியுடையதாயிற்று. இவ்விரு பள்ளிகளிலும் இலக்கிய இலக்கணப் பாடங்கள் சமயப் பாடங்கள் இவற்றைப் பயிற்றுவிப்பதற்குத் தக்கதொரு தமிழாசிரியரையும் அமைத்திருக்

தார்கள், உடையவர் பிறந்த நாளாகிற ஒவ்வொரு திருவாதிரையிலும் தக்க சொற்பொழிவாளர்களைக்கொண்டு இலக்கண இலக்கியங்கள் சமயநூல்கள் உலகியல் அறிவியல் நூல்கள் எல்லாவற்றையும் சொற்பொழிவாற்றும்படிச் செய்து வந்தார்கள். அது பள்ளி தோன்றிய காலந்தொட்டு இன்றளவும் தொடர்ந்து நடந்துகொண்டு வருகிறது. இனியும் தொடர்ந்து நடந்து வருமென்பதற்கு ஐயமில்லை. ஏனெனின் நல்ல பண்பாடுகள் வாய்ந்த அவர்கள் மகனார் திரு. ஆர். எதிராசலு நாயுடு அவர்களே இப்பொழுது அப் பள்ளிகளில் தாளாளராக இருந்து வருகின்றார்கள். இவர்கள் இளமையிலேயே சமயப்பற்றும் அடியார் பற்றும் கல்விப்பற்றும் மிக்குத்திருத் துழாய்போன்று விளங்குகிறார்கள்.

இவ்வாறு பல்வகையாலும் சிறப்புற்றுச் சமயம் கல்வி அறிவு ஒழுக்கம் இவைகளில் மேம்பாடுற்றிருந்த நம் சுவாமிகளது திருநாடு அலங்கரிப்பு பொதுவாகத் தமிழ் உலகத்திற்கும் சிறப்பாக வைணவ உலகத்திற்கும் ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழவாகும். ஆயினும் காலத்தைக் கடக்க எவர்தாம் வல்லர்? இவர்கள் உயிர் திருமகள் கேள்வன் திருவடியில் இன்புறுவதாக. இவர்கள் குடும்பத்தாருக்கு எம் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

தமிழ்த்தாய் வாழ்க.

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

### சங்கத் தலைவர், முத்தமிழ் வள்ளல், இராவ்பகதூர் திருவாளர்

## ஆ. யா. அருளானந்தசாமி நாடார் அவர்கள்

திருவள்ளுவர் யாண்டு 1985 சித்திரைத்திங்கள் 9-ஆம் நாள்
(21—4—54) புதன்கிழமை இறைவன் திருவடி நீழல்
எய்தியதைக் குறித்துச்

**சங்கத்தார் இரங்கிக் கூறிய**

## கையறு நிலை.

சீராரும் நிலமகளின் திருமுகமாய்த் திகழ்ந்துமிகு செல்வம் வாய்த்துக்
காராரும் பொழிலுடனே கழனிவளம் கவினுறவே காட்சி நல்கி
ஏராரும் செந்தமிழின் இனிமைமிகு தமிழ்நாட்டின் இறைமையாகப்
பாரோர்கள் புகழ்தஞ்சைப் பதிமேவிப் பிறந்தபெரும் பண்பே அந்தோ!

அன்புமிகும் அருளூற்றாய் அருங்குணத்தின் பிறப்பிடமாய் அமைந்தாய் நட்பின்
இன்புமிகும் நல்லுருவாய் ஏற்றமுடன் வந்தனையே ஏழைசெல்வர்
துன்பமுறும் போதவர்க்குத் துணையாகித் துயர்துடைக்கும் தூய்மைமிக்கோய்!
மண்பதைக்கோர் காட்டாகத் தோன்றியநல் வள்ளால்நீ மறைந்தாய் அந்தோ!

முத்தமிழ்க்கும் வள்ளலென மூதறிஞர் போற்றுமொரு முதன்மை தாங்கும்
உத்தம! நற் காந்தைவளர் தமிழ்ச்சங்கத் தலைவா! உன் உதவி தன்னால்
எத்தனையோ கல்விபயில் நிலையங்கள் ஏற்றமுற இலங்க உன்போல்
இத்தரையில் பிறந்தவர்யார்? இனிப்பிறப்பார் யாருளர்எம் இதய வாழ்வே

தமிழ்த்தாயின் காவலனே! தமிழ்ச்சங்கம் வளர்கல்வி நிலையம் தம்மை
அமிழ்தமெனப் பேசிதிரு ஆவடுதண் டுறைமேவு ஆதீனத்தார்
தமையெடுத்து வளர்க்கபெருந் தொண்டாற்றி ஆங்கவர்கள் தந்த போதும்
சுமையாகக் கருதாமல் சூழ்நிலையை நன்றாக்கித் துலங்கச் செய்தாய்.

தஞ்சைநகர் மக்களுக்கோர் தாயாகிப் பணிபுரிந்த தன்மைமிக்கோய்!
பஞ்சையராய்ப் பாமரராய்ப் பசித்துனது படியடைந்தால் பரிந்தழைத்து
நெஞ்சாரப் பேசியவர் நெடுந்துன்பம் நீக்கிமனம் நெகிழ்ந்தன் னுரை
அஞ்சாதீர் என்றஅருள்ஆனந்தசாமிஎனும் அரசே! அந்தோ!

இசைநோக்கி அறஞ்செய்வார் இவ்வுலகில் பற்பலரும் நீயோ 'என்றன்
அசையாத கடமை' என ஆயிரம்பல் லாயிரமாய் அறம் புரிந்தாய்
நசையோடு நீபுரிந்த நன்மைகட்கோர் எல்லையில நலிவால் வாடித்
திசைநாலும் கலுழ்ந்தாற்றப் பிரிந்தனையே திக்கற்றோர் தேவே! அந்தோ!

தேவர்திருப் பணிக்கென்றும் திக்கற்ற மாணவரின் சேவைக்கென்றும்
நாவலரைப் போற்றற்கும் நற்கல்விக் கூடத்தை நடத்த வென்றும்
மேவுபல சமயத்தின் வளர்ச்சிக்கும் அரசியலில் விளங்கு கட்சித்
தேவைகளுக் கென்றுமுன் செல்வமெலாம் வழங்கியநற் சிறப்பே அந்தோ!

அலகிலவாய் மாணவரை அயலூரிற் கலைபயில அனுப்பும் இந்த
நிலைமாறி நின்றுபுகழ் எய்தவொரு கல்லூரி நிறுவித் தஞ்சை
வலமுறவே எண்ணினையே! அந்தோஎம் வள்ளால்! உன் மனம்போல்யாங்கள்
சிலநாளில் உன்நினைவாய்த் திகழகலைக் கல்லூரி திறப்பேம் அந்தோ!

மாசகன்ற கிறித்தவனாய் மண்ணுலகில் தோன்றிபிற மதத்தாரோடும்
பாசமொடு வாழ்ந்தனை! யுன் பரந்தமனப் பக்குவத்தைப் பகரார்யாரே
வாசமலர்க் கொத்துதிர்த்து வானழுது நீர்பொழிய வாய்புலம்பித்
தேசமெலாம் நின்றாற்றச் சேர்ந்தனையோ சேசுபதம் தேறேம் அந்தோ!

இங்ஙனம்,

கரந்தை,
22—4—1954.

**S. சுயம்பிரகாசம்,** B. A., B. L. M. L. A.,
அமைச்சர்.

# தமிழக ஆட்சி மொழி மாநாடு.

சிவ. பழமலை, பெண்ணாகடம்.

---

**குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் ஐ. நாவுக்கு நன்றி**

பெண்ணாகடம் ஏப் 27:—தமிழக ஆட்சி மொழி மாநாடு தென்னாற்காடு மாவட்டம் பெண்ணாகடத்தில் திரு. அ. கசபதி நாயகர் B. A; B. L; M. L. C; தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தமிழகத்தின் பல பக்கங்களிலிருந்து ஏராளமான மக்கள் வந்திருந்தார்கள்.

காலையில் மிகப் பெரிய ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தில் யானை, குதிரை, மிதிவண்டி, தமிழ்த் தொண்டர்கள் புடை சூழ தமிழ்த் தலைவர்கள் ஊரை வலம் வந்த காட்சி மிகச் சிறப்பாக இருந்தது.

திருச்சி "தமிழர் நாடு" ஆசிரியர் திரு. விசுவநாதன் அவர்கள் தமிழ்க் கொடியை ஏற்றி வைத்துச் சேர, சோழ, பாண்டிய மன்னர்களுடைய வரலாற்றைக் கூறித் தமிழ்க் கொடி ஒவ்வொரு வீட்டிலும் பறக்கும் காலம் நெருங்கி விட்ட தென்றார். மேலும் தமிழ் நாட்டில், தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே தமிழில் ஆட்சி நடத்த வேண்டும் என்றார்.

வரவேற்புக்குழுத் தலைவர் திரு. சிவ. பழமலை தலைவர்களை, வரவேற்றுப் பேசுகையில், பார்வையாளரையும் பெற்று, ஆறு ஆண்டுகளாகியும் நீதி மன்றங்களிலும், வழக்கு மன்றங்களிலும், அன்னிய மொழியே ஆள்கிறதாக வருந்தித் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் என்றார். மேலும் பேசுகையில் நம்மோடு உரிமை பெற்ற இலங்கையில் சிங்கள மொழியும், தமிழும் ஆட்சி மொழியாக அமைந்துள்ளது. என்றும், தமிழகத்துடன் இணைந்து வாழ்ந்து அண்மையில் பிரிந்த ஆந்திரம் தன் தாய் மொழியான தெலுங்கை ஆட்சிமொழியாக்கி நலமடைந்து வரு

கிறதென்றும், ஆகவே நாமும் தமிழையே ஆட்சி மொழியாகக்கொள்ள வேண்டும் என்றும், தமிழ் ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டால் அறிவு மிக, நாகரீகம் ஓங்க, அரசியலை அறிந்து கொள்ள, ஒற்றுமை ஓங்க வழி ஏற்படும் என்றும், ஆகவே தமிழை ஆட்சி மொழியாக்க அரசியலார் ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மாநாட்டின் தலைவர் திரு. அ. கசபதி நாயகர் எம். எல். சி, தனது தலைமையுரையில் ஆந்திரா சித்தூர்ப்பகுதியையும், மலையாள நாஞ்சில் நாட்டையும் தமிழகத்துடன் இணைத்து எல்லை காண வேண்டும் என்றார். மேலும் ஒவ்வொருவருக்கும் மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும் வேண்டுமென்றார். தமிழை ஆட்சி மொழியாக்க சட்ட சபை முடிவுசெய்து சட்டமியற்ற வேண்டும் என்றார்.

திருக்கோவிலூர் வழக்கறிஞர் திரு. தியாகராய கோபால்சாமி அவர்கள் திரு வி. க. படத்தைத் திறந்து வைத்து அவர் தொண்டை விளக்கிச் சொற்பொழிவு ஆற்றினர்.

விருத்தாசலம் வழக்கறிஞர் திரு. அ. இரத்தினசபாபதி பிள்ளை அவர்கள் "திருவள்ளுவர்" உருவப் படத்தைத் திறந்து வைத்து அவர் மேன்மைகளைப் பற்றி மிக அழகாகப்பேசினர்.

பின்னர்த் திரு. கா. அப்பாதுரை M.A; L.T; அவர்களும் திரு. இராமநாத அடிகளும் தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டியதன் இன்றியமையாமையை விளக்கிச் சொற்பொழி வாற்றினர்கள்.

முடிவுகள்:—

மாநாட்டில் கீழ்க்கண்ட முடிவுகள் நிறைவேறின.

தமிழகத்திற்குத் தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டு மென்றும், ஆந்திரம் பிரிந்த சென்னையை "தமிழ் நாடு" என்று அழைக்க வேண்டுமென்றும் நிறைவேற்றப்பட்டன.

திருக்குறளை மொழி பெயர்க்கும் பணியினை ஐ. நா'. சபைத் தொடங்கி இருப்பதற்கு நன்றி செலுத்தியும், அப்பணியைத் தமிழர் பண்பும், நாகரிகமும் அறிந்த தமிழ் அறிஞர் குழுவிடம் ஒப்படைக்குமாறு ஐ. நா. சபையைக் கேட்டுக்கொண்டும் ஒரு முடிவு நிறைவேறியது.

திரு. காமராச நாடார் காங்கிரசு சட்டசபைக் கட்சித் தலைவராகத் தேர்ந்து எடுக்கப் பட்டதைப் பாராட்டுவதாகவும் அவரது அமைச்சரவைக் காலத்தில் இம்மாநாட்டின் குறிக்கோள் நிறைவேறுமென நம்புவதாகவும் முடிவு செய்யப்பட்டது.

செயலாளர் திரு. பி. சொ. வேலாயுதம் பிள்ளை நன்றி கூறினர். நாட்டு வாழ்த்துடன் மாநாடு இனிது முடிவுற்றது.

---

## நன்கொடை.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் கொள்கைகளும், முயற்சிகளும் வெற்றிபெறக் கரந்தை திரு. சிவ. சுப்பிரமணிய பிள்ளை யவர்களும் கூத்தாநல்லூர் திரு. அப்துல் அஜீஸ் அவர்களும் செய்கோனில் வாழும் பெருமக்களுமாகச் சேர்ந்து, கட்டிட நிதிக்காக (13650) பதின் மூன்றுயிரத்து அறுநூற்றைம்பது வெண் பொற் காசுகள் வழங்கியுள்ளனர். இவர்களின் முயற்சி நம் தமிழ் நாட்டில் வதியும் தமிழ் மக்கட்கு ஓர் எடுத்துக் காட்டாகவும், தூண்டு கோலாகவும் வுள்ளது. இவ்வாறு வழங்கியருளிய பெருமக்கட்குச்சங்கத்தின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருச்சிராப்பள்ளி, மயிலஞ் சந்தைப் பெரு வணிகரான திருவாளர் T. துரைராச பிள்ளை அவர்கள் நம் சங்கத்தின் வளர்ச்சி கருதி (1001) ஆயிரத்தொரு வெண்பொற் காசுகள் வழங்கியுள்ளனர். இவர்கட்கும் நம் சங்கத்தின் வாழ்த்துதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமைச்சர்.

---

# மொழி பெயர்ப்பு.

புலவர். சி. கோவிந்தராசன், விரிவுரையாளர் கரந்தைப் புலவர் கல்லூரி.

தமிழைக் குறித்துப் பேச விரும்பும் யாரும் தமிழின் பண்டைய நிலையைக் குறித்து ஒரு சிறிதாவது பேசாமல் விடுவது இல்லை. இம் மொழிக்குத் தொன்மையைக் கற்பிப்பவர்கள் எல்லாம், மொழி இயல் ஆசிரியர்கள் ஆயினும் சரி, புராணக் கூற்றுக்களையே முற்றிலும் மெய்யெனக் கொண்ட கொள்கையினராயினும் சரி, அல்லது மொழிநூல் உணர்ச்சி, புராணக்கூற்று என்ற இவ்விருவகையினையும் தமது கொள்கைக்கு ஏற்றவாறு எடுத்தாளும் திறமைவாய்ந்தவர்களாயினும் சரி, தமிழ் மொழியானது இவ்வுலகில் உள்ள எம்மொழிகளினுள்ளும் மிகப்பழமை வாய்ந்தது என்றுவது, அல்லது மிகப் பழமை வாய்ந்த ஒரு சில மொழிகளுள் இதுவும் ஒன்று என்றுவது சொல்லாமல் விடுவதில்லை. தமிழின் முதுமை நிலையினை நாட்டுவதற்கு இலெமூரியாவையும் இவற்றோடு இணைத்துரைக்கும் நுழைமாண்புலமை சான்ற பேரறிஞரும் நம்மில் இருக்கின்றார்கள்.

தமிழ் மொழி ஆரியம்போல், இன்னும் இலத்தீன் முதலிய மற்ற மொழிகளைப்போல், உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா விடினும் இப்பொழுது உலகத்து வழங்கும் மொழிகளுள் ஒன்றாக இருப்பதனால் நமக்கு உள்ள பயன் யாது என்று ஆராயக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழில் நாம் நூல்கள் என்று சிறப்பிப்பன வெல்லாம் பெரும்பாலும் சங்க காலத்தினவாகும் பழைய நூல்களையேயாம். அவைகள் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த தமிழரின் நாகரிகம் இன்னதென்றறிந்து கொள்ளுதற்குக் கருவியாக இருக்கின்றனவேயன்றி தமிழர் நீங்கிய ஏனையோர்களின் நாகரிகங்களைப் பற்றியோ காலப்போக்கின் வளர்ந்த அறிவின் துறைகளைப்பற்றியோ உணர்த்துவனவாய் அமையவில்லை. இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களில் கதைப்போக்கு ஒரு புறமிருக்க, இந்நூல்களிலிருந்து நாம் தெரிந்து கொள்வதெல்லாம் இவைகளைத் தமிழில் யாத்த பெரும் புலவர்களின் கற்பனைகளேயாம். தமிழ் வழக்கு என்று அவர்கள் திரித்த ஆரிய வழக்குகள் எத்தனையோ உள்ளன. இவற்றால் இலக்கியப் புலமை வெளியாகின்றனவேயன்றி, மற்றைய அறிவியற்றெளிவு அடைதற்கிலக்காமோ ?.

சித்தர் நூல்களைக்கற்றூர், இந்நாட்டில் இருந்த உண்மைகளை எல்லாம் மேல் நாட்டாருக்குப் போகர் கற்றுக்கொடுத்துவிட்டார் என்பர். இப்படியெல்லாம் பழங்கதைகள் பேசுவதில் தமிழ் மக்கள் இன்னும் தளர்ச்சியடைந்தாரில்லை.

மொழியென்பது மக்கட் கோடிகளின் உள்ளக் கிடக்கையைப் புலப் படுத்த இயற்கையில் எழுந்ததொரு கருவியேயன்றி அதற்கு என்று யாதொரு ஆற்றலும் இல்லை. காலப்போக்கில் மொழியும் சிறிது திரிந்து கொண்டே வரவேண்டியது அம்மொழியினிடம் அமைந்திலங்கும் ஆற்றல் களிலொன்றேயென்று கூறலாம். எனவே தமிழ்மொழிக்குக் குறையாகக் கருதும் இரசாயனம் போன்ற சாத்திரங்களைத் தமிழ் மொழியில் மொழி பெயர்ப்பு செய்தல் வேண்டும்.

இன்பத்தைப் பெறுவதற்குப் பொருள் ஆதாரமாவதைப்போல் இலக் கிய உணர்ச்சி ஒரு நாட்டில் வளர்வதற்குச் சாத்திரங்களின் பெருக்கும் இன்றியமையாததாகும். அஃதிலாது பழமையையே பேசின் அது பொருளின்றி இன்பம் நாடுவதில் பின்னிடா ஓராடவனின் நிலையையொத் ததேயாகும்.

தமிழின் மேம்பாட்டைக் கருதுவார் என்றும் அழியாத தன்மைத் தாய நூல்களைத் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும். என்றும் அழியாத நூல்களை இயற்றுவதற்கு அழியாத உலகியல்புகளை அறிந்து கொள்ள வேண்டுமென்பதேயாம். மொழியை மேம்படுத்தும் எண்ணம் வாய்ந்த பலரும் ஒன்று கூடித் தத்தமக்கு ஏற்றவாறு பிற மொழிகளைப் பயின்றும் அவைகளில் உள்ள சாத்திரங்களைத் தமிழில் மொழிபெயர்த்தும், இற வாத் தன்மை வாய்ந்த நூல்களை இயற்றிப் போற்றல்வேண்டும். இதனையே பாரதியாரும் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த் தல்வேண்டும் என்று கூறியதன் கருத்துமாகும்.

# மனிதன்.

நா. இராசகோபாலன், IV U. C.

நீங்கு கடலுடுத்த வியன்கண் ஞாலத்தில் எண்ணி முடியா உயிர்கள் வாழ்கின்றன. அவ் வுயிரினங்களை நூல் வல்லோர் அறுவகையாகப் பகுத்தனர். ஆறுவதான சிறந்த அறிவைப் பெற்றவன் மனிதன் என்று சிறப்பித்துக் கூறப்படுகிறுன். நல்லிசைப் புலமை மெல்லியல் ஒளவையும் 'அரிதரிது மானிடராதல் அரிது' என்று மக்கட்பிறப்பின் சிறப்பைத் தெரிவிக்கிறுள். ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனும் 'மக்கள் தாமே ஆறறிவுயிரே' என்றும் ''உயர்திணை என்மனுர் மக்கட் சுட்டே'' என்றும் இக் கருத்தினை வலியுறுத்திக் கூறுகிறுர்.

இனி உலக உயிரினங்களை அறுவகையாகப் பிரித்த மேலோர் மனிதனை எத்தனை வகையாகப் பிரித்துள்ளனர் என்பதை நோக்குவோம்.

மனிதனை அவன் வாழும் நாடு காரணமாகப் பெயரிட்டழைப்பதுண்டு. ஆசியப் பெருநிலத்தில் வாழ்பவனை ஆசிய நாட்டான் எனவும் ஐரோப்பியப் பெருநிலத்தில் வாழ்பவனை ஐரோப்பியன் எனவும் இந்திய நாட்டில் வாழ்பவனை இந்தியன் எனவும் அழைத்தல் ஒருவகை வழக்கு.

மற்றும் மொழி காரணமாகவும் மனிதனைப் பிரிப்பதுண்டு. தமிழ் மொழி பேசுபவனைத் தமிழன் என்றும், சீன மொழி பேசுபவனைச் சீனன் என்றும், ஆங்கில மொழி பேசுபவனை ஆங்கிலேயன் என்றும் அழைப்பர்.

மேலும் மனிதன் மேற்கொண்டுள்ள மதம் காரணமாகவும் மனிதன் பகுக்கப் படுவான். புத்த மதத்தை மேற்கொண்டவன் புத்தன் என்றும், கிருத்துவ மதத்தை உட்கொண்டவன் கிருத்துவன் என்றும், முகம்மதிய மதத்தைப் போற்றுபவன் முகம்மதியன் என்றும் பிரிக்கப்படுதல் கண்கூடு.

உடல் நூல் வல்லார் மக்களை மூன்று வகையாகப் பிரிக்கின்றனர். அவர்கள் காகேசியர், மங்கோலியர், நீகிரோவர் என்று கூறப்படுவர்.

பரிமேலழகரும் மனித இனத்தைப் பகை, நொதுமல், நட்பு என்று நட்புத் தன்மையின் அடிப்படையில் மூவகையாகப் பகுத்துள்ளார்.

ஔவைப் பிராட்டியும் வண்மையை நிலைக்களனாகக் கொண்டு உலக மக்களை இருவகையாக்கினார். 'இட்டார் பெரியோர், இடாதார் இழி குலத்தோர்' என்பது அவர் பாகுபாடு.

தொழிலை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளி, முதலாளி எனவும் தற் காலத்தில் பிரிக்கப் படுகிறது.

இனி மனிதனை வேறு எவ்வகையால் பிரித்தல் சாலும் என்பது ஆராயற் பாலது.

மனிதனின் ஆக்கம், கல்வி, புகழ், செல்வம் அனைத்திற்கும் சிந்தனை இன்றியமையாதது. சிந்தனையின் விளைவும். வளர்ச்சியுமே சீர் மிக்க நாகரிகம். சுவடி, கலை, புதுக் கண்டுபிடிப்புகள் ஆகும். சிந்தனையின் சிறப்பைக் கூறாத அறிஞர்கள் உலகில் இலர் எனலாம். எண்ணமே மனித வாழ்வின் முதுகெலும்பு.

"ஆராயமாட்டாதவன் மடையன், ஆராய மனமில்லாதவன் கண் மூடி, ஆராயத் துணியாதவன் அடிமை" என்று சர் வில்லியம் குருமார்ட் என்ற அறிஞர் சிந்தனைத் தன்மையைக் கைவிட்டவனை வகைப்படுத்துவர் போல் கடிகிறார்.

விடுதலைத் தன்மையை எடுத்துக் கூறவந்த மில்டன் என்ற முது பெரும் புலவர், "நான் பல பொருள்களை அறிய, அறிந்தவற்றைப் பற்றிச் சிந்திக்க, சிந்தித்தவற்றை நம்ப, நம்பியவற்றை மனச் சான்றுக்கு மாறின்றி எடுத்துக் கூறக்கூடிய தன்மையைத் தருவதுதான் சிறந்த விடுதலையின் நிலை' என்று கூறுகிறார். இதனால் சிந்தித்தல் மனித இனத்தின் மிகவும் முக்கியமான பண்பு என்பது உள்ளங்கை நெல்லிக்கனி யெனத் தெள்ளத் தெரிகின்றது.

உலகின் பல நிலைகளையும் நெடுநாள் உன்னி, துன்பத்தினைத் துடைத் தெறிய வழி வகுத்த புத்தர் "எண்ணத்தின் மறு பதிப்பே உலகம்" என்று ஆணித்தரமாகக் கூறிச் செல்கிறார்.

உரோமப் பெருநிலத்தின் ஒரு தனிப் போரசனாய் விளங்கியவன் 'மார்க்கஸ் அரேலியஸ்' என்பவன். இவன் தன் சிந்தனைத் துளிகளைக் குறித்துவைத்த சுவடி இன்று புவியின் கருத்துக் கருவூலமாய் விளங்கு கிறது. அத்தகையோனும் "வாழ்க்கையானது எண்ணத்தின் பலனே, என்று பறை சாற்றிப் போந்தான்.

வாளும் கையுமாகத் தன் வாழ்நாளின் பெரும் பகுதியைப் போர்க் களத்திலே கழித்த நெப்போலியனும் "எண்ணங்களே உலகத்தை ஆளுகின்றன" என்று கூறியுள்ளான்.

ஜெர்மனியில் உறங்கிக் கிடந்த உள்ளங்களைத் தட்டி எழுப்பி வாழ்வின் வளத்திற்கு வழித்துணையாக விளங்கிய புலவன் கோதே என்பவன் 'நாம் எதை விரும்புகிறோமோ அந்த விருப்பமே நம்முடைய நடை, யுடை, யொழுக்கத்தையும் மாற்றி நம் விருப்பத்தின் ஆக்கத்திற்கு உய்க்கிறது' என்று சிந்தனையை வலியுறுத்துகிறான்.

இக் கருத்தை ஒட்டினாற்போன்று ஆங்கிலத்தில் ஒரு பொன் மொழி அமைந்து கிடக்கிறது "மனிதன் எதைப்பற்றி (ஆழ்ந்து) நினைக்கிறானோ அதாகவே அவன் மாறி விடுகிறான்" என்பது அப் பொன் மொழியின் கருத்து (What a man thinks that he becomes)

சாற்றிய பல்கலைப் போற்றிப் பகுத்துணர்த்திய பெரும் புலவன் வள்ளுவனும் சிந்தனையைக் குறித்து என்ன கூறியுள்ளான் என்பதும் சிந்திக்கற்பாலது. இவரும் சிந்தனைச் சிறப்பிகளின் நன் முடிபோடொத்து பல்விடங்களில் சொல்லிச் செல்கிறார். இவர் 'தெரிந்து செயல் வகை என்ற அதிகாரத்தை ஆய்தற் சிறப்பிற்காகவே வகுத்துள்ளார்'

மேலும், "வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனைய துயர்வு" என்றும்
"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்" என்றும்
"அரிய வென்றாகாத இல்லை பொச்சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்" என்றும்
"உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது எய்தப் பெறின்" என்றும்
"எண்ணித் துணிக கருமம்" என்றும்
"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்" என்றும்

சிந்தனையின் சிறப்பைச் சீர் தூக்கி செவியறிவுறுத்துகின்றார்.

இவற்றை நாம் உன்னுங்கால் மனித இனத்தின் மங்காப் பெரும் பண்பு சிந்தனை செய்தல் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. ஆதலின் சிந்தனையின் அடிப்படையில் மனித இனத்தை மூவகையாகப் பிரிக்கலாம். அவர்களை மனிதரில் விலங்கு என்றும், மனிதரில் மனிதர் என்றும், மனிதரில் அறிஞர் என்றும் அழைக்கலாம்.

மனிதரில் விலங்கு என்பவன் தன் மொழி, இனம், நாடு இவற்றைப் பற்றியும் நல் வாழ்வின் மேன்மைக்கு ஆவன பற்றியும் சிந்திக்காதவன். இவனது சிந்தனை விலங்கின் சிந்தனையைப்போன்று குறித்த எல்லைக்குள் குறுகிக் கிடக்கக் கூடியது; இவனுடைய சிந்தனை சில மணி எல்லைக்குள் சென்று மீளும் தன்மையைக் கொண்டது.

மனிதரில் மனிதன் என்பவன் இடைப்பட்டவன். சிந்தனையின் மதிப்பை ஒருவாற்ருன் அறிந்தும் சிந்திக்கும் தன்மையைச் செம்மையுறக் கொள்ளுபவன். ஒருகால் எண்ணி மற்ருேர்கால் எண்ணுது தன் வாழ்க்கையை நடத்துபவன். இவனுடைய சிந்தனை சில நாட்களை எல்லையாகக் கொண்டதெனலாம்.

மனிதரில் அறிஞன் என்பவன் எண்ணுதலையே தன் தொழிலாகக் கொண்டவன். வாழ்க்கைத் துறையில் பல நிலைகள் இருப்பினும் தான் நுழைந்த துறையிலேயே இடைவிடாது சிந்தித்தலை மேற்கொண்டு சமுதாயம் உய்யும் வழி வகுக்கும் செம்மல். இவனுடைய சிந்தனை ஆண்டுகளை எல்லையாகக் கொண்டது எனலாம்.

மனிதரில் விலங்கு சென்ற காலத்தையே சிந்தித்து வருங்காலத்தைப்பற்றி எண்ணுது கிடப்பவன். மனிதன் சென்ற கால நினைவுகள் சிந்தையில் இருக்கவும் காலடி வைக்கும் ஒரு நாளைப்பற்றியே எண்ணி நடப்பவன். அறிஞன் சென்ற காலம் என்ற எருவிட்டு வருங்காலம் என்ற பயிரை வளர்க்கும் நீண்ட தூரப் பார்வை உடையவன்.

முன்னவனுக்கு, அறிவு வீட்டைக் கொளுத்தப் பயன்படும் தீப்பந்தம் இடையவனுக்கு, அறிவு குளிர் தாக்கும்போது மட்டும் தேடிச் சென்று தீக்காய உதவும் நெருப்பு.

பின்னவனுக்கு அறிவு தான்விரும்பும் புத்துலகை உண்டாக்க உதவும் உலைக் கூடத்தீ.

விலங்குக்கு, உணர்ச்சி முதலாளி. மனிதனுக்குத் தோழன். அறிஞனுக்கு அது அடிமை.

மனிதரில் விலங்கு, உறவினரல்லாத பிறர் மாட்டு அன்பினைக் காட்டாத மலட்டுள்ளம். மனிதன், தன்மீது காட்டப்படும் அன்பினைப் பிரதிபலிக்கும் கண்ணுடி. அறிஞன் அன்பின் பெருக்கமான அருளின் வெள்ளம்.

விலங்கு, தண்ணொளி வீசும் வெண்ணிலவில் களங்கத்தையே காண்பவன். மனிதன், புலியிடம் ஒரு கால் வீரமும் ஒரு கால் கொடுமையும்

காண்பவன். அறிஞன், ஓடித் திரியும் எளிய நாயிடமும் நன்றி மறவா நற் பண்பினைக் காண்பவன்.

கடமை, விலங்குக்கு முள்வேலி. அதில் சில சமயம் கசப்புக் காண் பவன் மனிதன். கீழ்ப்படிந்து கடுகளவும் தவறுதவன் அறிஞன்.

இம் முப் பாகுபாட்டுள் புலவன் எந்நிலையில் நிற்பவனுக உலகம் கருதுகிறது என்பது உன்னுதற் பாலது.

கவிஞர்கள் இத்தகைய சிந்தனையோட்டம் வாய்ந்து எதிர்காலத் தினைக் கற்பனைக் கண்ணுல் காணும் தகைமை பெற்றவர்கள் என்பதனை அறிந்து இலத்தீன் மொழியில் "முன்னறிபவன்" என்று பொருள்படுஞ் சொல் அவர்களுக்குச் சூட்டப்பட்டுள்ளது.

கிரேக்கர்களும், சிந்தனை காரணமாக எதிர்கால உலகினைப் படைப் பவன் என்பதை உணர்ந்து கவிஞர்களுக்கும் "படைப்பவன்" என்று பொருள்படும் "போயேசிஸ்" என்ற பீடுடைப் பெரு மொழியைச் சூட்டினர்.

தலை சாய்ந்து நன்னிலை ஓய்ந்து பெருமூச்சு விட்டு பெருந் துன்பம் படும் தமிழ் நாட்டினை உலகம் தன் கழுத்து வலிக்க திரும்பிப் பார்த்து மூக்கின் உச்சி சுட்டுவிரல் சேர்த்து உவப்புடன் வாழ்த்தும் உன்னத நிலைக்குக் கொண்டுவர இத்தகைய புலவர் பெருமக்கள் உலைவின்றித் தாழாது உஞற்று வாராக!